**பாடம் 3**

# மனிதர்களின் நிலை

**மனன வசனம்**

**எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமை அற்றவர்கள் (ஆனோம்). ரோமர் 3:23.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 1:16,17,22-32; ரோமர் 2:1-10, 17-24; ரோமர் 3:1,2; ரோமர் 3:10-18,23.**

அக்டோபர் 14 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



ரோமர் புத்தகத்தின் ஆரம்பத்தில், பவுல் ஒரு முக்கியமான உண்மையை வலியுறுத்த முயல்கிறார்; அது நற்செய்தியின் மையமான உண்மை; மனிதரின் நிலை கவலைக்குரியது என்பதே அவ்வுண்மை. நாம் அனைவரும் விழுகை முதலே தீட்டுப்பட்டுவிட்டோம். நம் கண்களின் நிறம்போல அதுவும் நம் மரபணுக்களில் எழுதப்பட்டுவிட்டது.

ரோமர் புத்தக்தின் விளக்கவுரையில் மார்டின் லூத்தர் பின்வருமாறு எழுதுகிறார்: ''**பாவத்திற்குட்பட்டவர்கள்** என்பதை ஆவிக்குரிய ரீதியில் பார்க்கவேண்டும்; அதாவது, நம்மைப்பற்றி நாமோ பிறரோ நினைப்பது போல அல்ல, தேவனுக்குமுன் நாம் எப்படித் தெரிகிறோம் என்று பார்க்கவேண்டும். மனிதருக்கு அக்கிரமக்காரராகத் தெரிகிறவர்களும், தங்கள் பார்வையிலும் பிறர் பார்வையிலும் நீதிமான்களாகத் தெரிகிறவர்களும் எல்லாருமே பாவத்திற்குட்பட்டவர்கள். வெளிப்புறமாக நற்கிரியைகளைச் செய்கிறவர்கள் தண்டனைக்குப் பயந்தோ, ஆதாயத்தையும் புகழையும் விரும்பியோ, ஏதாவது நன்மைசெய்வதால் கிடைக்கும் மகிழ்ச்சிக்காகவோ அவற்றைச் செய்கிறார்களேயொழிய, மனதார விருப்பத்துடன் அப்படிச் செய்வதில்லை. இப்படித்தான் மனிதன் வெளிப்புறத்திற்கு நற்கிரியைகளை தொடர்ந்து செய்துவருகிறான்; உள்ளுக்குள் பாவ ஆசைகளிலும் தீய இச்சைகளிலும் முற்றிலும் மூழ்கியிருக்கிறான்; இவை நற்கிரியைகளுக்கு எதிரானவை'' - *Commentary on Romans, p. 69.*

2017, அக்டோபர் 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## தேவ வல்லமை

*‘கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.’ ரோமர் 1:16,17.*

**இந்த வசனங்கள் தனிப்பட்ட விதத்தில் உங்களிடம் சொல்வது என்ன? இதிலுள்ள வாக்குறுதிகளையும் நம்பிக்கையையும் நீங்கள் எவ்வாறு அனுபவித்திருக்கிறீர்கள்?**

இந்த வசனங்களில் பல முக்கிய வார்த்தைகள் உள்ளன:

**1. சுவிசேஷம்:** ‘விசேஷ செய்தி’ அல்லது ‘நற்செய்தி’ என்று அர்த்தமுடைய ஒரு கிரேக்க வார்த்தை சுவிசேஷம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக எல்லா நற்செய்தியுமே சுவிசேஷம்தான். ஆனால், இங்கு ‘கிறிஸ்துவின்’ சுவிசேஷம் என்று சொல்லப்படுவதால் ‘மேசியாகுறித்த நற்செய்தியை’ இது குறிக்கிறது. (**மேசியா** என்று அர்த்தமுடைய கிரேக்கச் சொல்தான் கிறிஸ்து என்று ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது). மேசியா வந்துவிட்டார்; அவரை நம்புவதால் மக்கள் இரட்சிக்கப்படமுடியும் என்பதே நற்செய்தி. நம்மில் நாமோ, தேவனுடைய பிரமாணத்திலோ இரட்சிப்பைக் காணமுடியாது; இயேசுவிலும் அவருடைய பூரண நீதியிலும்தான் நாம் இரட்சிப்படையமுடியும்.

**2. நீதி:** தேவனோடு ‘ஒழுக்கநேர்மையுடன்’ இருக்கிற தன்மையை இந்த வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. இந்த வார்த்தைக்கு ஒரு விசேஷமான அர்த்தம் ரோமர் புத்தகத்தில் சொல்லப்படுகிறது; தொடர்ந்து நாம் படிக்கும்போது அது பற்றிப் புரிந்துகொள்ளலாம். ‘தேவ நீதி’ என்று ரோமர் 1:17 கூறுகிறது. எனவே, இது தேவனிடமிருந்து வருகிற, தேவன்தாமே தருகிற நீதியாகும். நித்திய வாழ்வின் வாக்குறுதியை நமக்குச் சாத்தியமாக்குகிற ஒரே நீதியும் இதுதான்.

**3. விசுவாசம்:** நம்பிக்கை, விசுவாசம் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் இந்த வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. **பிஸ்டெவோ** (நம்பு), **பிஸ்டிஸ்** (விசுவாசம்). இரட்சிப்பின் அடிப்படையில் விசுவாசம் என்றால் என்ன அர்த்தமென்பதை போகப்போக ரோமர் புத்தகத்தின் ஆராய்ச்சியில் நாம் கண்டுகொள்வோம்.

இரட்சிப்பின் நிச்சயம்குறித்து எப்போதாவது தடுமாற்றம் அடைந்திருக்கிறீர்களா? நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேனா, இல்லையா? நான் இரட்சிக்கப்படுவது சாத்தியமா? இது போன்ற கேள்விகள் உங்களுக்குள் எழுந்திருக்கிறதா? இந்தப் பயங்களுக்கு காரணம் என்ன? எதன் அடிப்படையில் பயம் உண்டாகிறது? அதாவது, விசுவாசமாக இருப்பதாகச் சொல்லியும் அதற்கு முரணான வாழ்க்கை வாழ்கிறீர்களா? ஆம் என்றால், இயேசுவில் உங்களுக்குள்ள வாக்குறுதிகளையும் நிச்சயங்களையும் நீங்கள் சொந்தமாக்கிக் கொள்வதற்கு என்னென்ன தீர்மானங்களை நீங்கள் செய்யவேண்டும்?

***ரோமர் 3:23இன் செய்தியை கிறிஸ்தவர்களாக இன்று நாம் நம்புவது எளிதாக இருக்கிறது; அதற்குக் காரணம் என்ன? அதே நேரம், இந்த வசனம் சொல்வது உண்மையல்ல என்று சிலர் சொல்வதற்குக் காரணம் என்ன?***

---

மனிதர்கள் பாவிகளென்பதை சிலர் ஏற்றுக்கொள்வதில்லை; அடிப்படையில் மனிதர்கள் நல்லவர்கள்தாம் என்கிறார்கள். நல்லவருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத்தன்மை என்னவென்பது புரியாததே இதற்கு காரணம். யாருடனாவது தங்களை ஒப்பிட்டு, தங்களை நல்லவர்களென்று எண்ணிக்கொள்கிறார்கள். அப்படிப் பார்த்தால் நம்மைவிட மோசமானவர்கள் இருக்கவே செய்வார்கள். தேவனோடும் அவருடைய பரிசுத்தம் மற்றும் நீதியோடும் நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நாம் எவ்வளவு அருவருப்பும் அசுத்தமுமானவர்கள் என்கிற உணர்வு நமக்கு உண்டாகும்.

'தேவ மகிமை' பற்றியும் ரோமர் 3:23 கூறுகிறது. இதற்கு பல்வேறு அர்த்தங்கள் கூறப்படுகின்றன. ஆனால், 1கொரி 11:7இல் ஓர் எளிய விளக்கம் இருக்கிறது; அதாவது, 'புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான்.' 'மகிமை' என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'சாயல்' என்றும் அர்த்தம் கூறலாம். பாவமானது மனிதரிலுள்ள தேவ சாயலைக் கெடுத்துவிட்டது. பாவ மனிதர்கள் தேவ மகிமையை அல்லது சாயலைப் பிரதிபலிக்கமுடியாத நிலைக்கு ஆளானார்கள்.

***ரோமர் 3:10-18ஐ வாசியுங்கள். இன்று இந்த நிலை எவ்விதத்திலாவது மாறியிருக்கிறதா? இவ்வசனம் சொல்வதில், எது உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது? கிறிஸ்துமட்டும் உங்கள் வாழ்க்கையில் இல்லையென்றால், எப்படிப்பட்டவர்களாக இருப்பீர்கள்?***

---

நாம் எவ்வளவுதான் மோசமானவர்களாக இருந்தாலும், நமக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. முதலாவது, நாம் முற்றிலும் பாவிகள் என்றும், நமக்கு நாமே எதையும் செய்வதற்கு நாம் திராணியற்றவர்கள் என்றும் உணரவேண்டும். இப்படிப்பட்ட உணர்வை நம்மில் உண்டாக்குவது பரிசுத்த ஆவியானவரின் கிரியையாக இருக்கிறது. பாவியானவன் ஆவியானவருக்கு எதிர்த்து நிற்காமல் இருந்தால், தான் நல்லவென்றும் நீதிமானென்றும் அவன் போடுகிற வேஷத்தை அவனே களைந்தெறியவும், கிறிஸ்துவிடம் ஓடி, ''தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்'' என்று அவருடைய இரக்கத்திற்காகக் கெஞ்சவும் அந்தப் பாவியை ஆவியானவர் வழிநடத்துவார். லூக்கா 18:13.

---

உங்களையும், உங்கள் நோக்கங்களையும், உங்கள் செய்கைகளையும், உங்கள் உணர்வுகளையும்பற்றி உள்ளபடியே உண்மையோடு சமீபத்தில் எப்போது ஆராய்ந்துபார்த்தீர்கள்? மிகவும் சங்கடமான அனுபவமாக அது இருந்திருக்குமல்லவா? உங்களுடைய ஒரே நம்பிக்கை என்ன?

## முன்னேற்றமா?

இருபதாம் நூற்றாண்டில் மனித இனம் முன்னேற்றம் கண்டுவருகிறதென்றும், ஒழுக்கநிலை அதிகரிக்குமென்றும், அறிவியலும் தொழில்நுட்பமும் ஒரு கனவு உலகத்தை நிறுவப்போகிறதென்றும் நம்புகிறார்கள். மனிதர்கள் பூரணமான ஒரு நிலையை நோக்கிச் செல்வதாகவும் நம்புகிறார்கள். சரியான கல்வியும் ஒழுக்கப் பயிற்சியும் இருந்தால் மனிதர்கள் தங்களையும் சமுதாயத்தையும் மேம்படுத்தலாம் என்றும் நம்புகிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் புத்தம்புதிய உலகில் நாம் நுழைந்தபோது இவை எல்லாமே நிகழ்ந்திருக்கவேண்டும்.

ஆனால், அப்படி எதுவுமே நடக்காததுதான் வருத்தமானது. வரலாற்றிலேயே கொடூரமான, மிருகத்தனமான ஒரு காலக்கட்டமாக இருபதாம் நூற்றாண்டு இருந்துள்ளது. முற்காலத்தில் கொலைகார மனிதர்கள் கற்பனைகூட பண்ணியிராத அளவுக்கு இருபதாம் நூற்றாண்டில் படுகொலைகள் நடந்துள்ளன; அறிவியல்தான் இதற்குக் காரணம்.

**பிரச்சனைக்கு காரணம் என்ன?**

---

***ரோமர் 1:22-32ஐ வாசியுங்கள். முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் என்ன விதத்தில் இருபத்தோராம் நூற்றாண்டில் இன்று வெளிப்பட்டு வருகின்றன?***

---

---

மரித்தோரின் உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை, புதியவானம்-புதிய பூமி போன்று கிறிஸ்தவ மார்க்கத்தின் பல்வேறு விஷயங்களை நம்புவதற்கு வேண்டுமானால் நமக்கு விசுவாசம் தேவையாக இருக்கலாம்! ஆனால், மனிதர்கள் விழுந்துபோன நிலையில் இருப்பதை நம்புவதற்கு விசுவாசம் தேவையென நினைக்கிறீர்களா? விழுந்துபோன நிலையின் விளைவுகளோடுதாம் இன்று ஒவ்வொருவருமே வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

குறிப்பாக ரோமர் 1:22,23 வசனங்களை வாசியுங்கள். இந்த நியதி இன்று எவ்வாறு மனிதர்களில் வெளிப்படுகிறது? இருபத்தோராம் நூற்றாண்டு மனிதர்கள் தேவனைப் புறக்கணித்து, எதை தங்களுக்கு விக்கிரகமாக்கி தொழுதுகொள்ள முயல்கிறார்கள்? அவ்வாறு செய்வதால் எவ்வாறு பைத்தியக்காரர்களாகியிருக்கிறார்கள்? உங்கள் பதிலை ஓய்வு நாள் வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.

---

---

---

ரோமர் 1ம் அதிகாரத்தில், நீண்டகாலமாக தேவனை மறந்து, மிகவும் இழிவான செயல்களுக்கு தங்களை விற்றுப்போட்ட புறஜாதியாரைப்பற்றி பவுல் பேசுகிறார்.

ஆனாலும், தன்னுடைய தேசத்தாரான தன்னுடைய சொந்த மக்களையும் அவர் விடவில்லை. அவர்களுக்கு எவ்வளவோ அனுகூலங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், (ரோமர் 3:1,2) 'அவர்களும் பாவிகள்; தேவ பிரமாணத்தால் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டவர்கள்; கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபை தேவைப்படுபவர்கள்' என்கிறார். **'தேவனுடைய பிரமாணத்தை மீறினதால், இரட்சிக்கப்படும்படி தேவனுடைய கிருபை தேவைப்படுகிற பாவிகள்'** என்கிற விதத்தில் யூதர்களும் புறஜாதிகளும் ஒன்றுதான்.

***ரோமர் 2:1-3,17-24 ஆகிய வசனங்களில் பவுல் எதை குறித்து எச்சரிக்கிறார்? யூதரானாலும் புறஜாதியாரானாலும் இந்த எச்சரிப்பில் நமக்குள்ள செய்தி என்ன?***

---

'அஞ்ஞானிகள் அனைவரையும் பாவிகளென்று சொல்லியபிறகு, இப்போது யூதர்களும் பாவத்தில் வாழ்வதாக அழுத்தமாகக் கூறுகிறார்; அவர்கள் நியாயப் பிரமாணத்திற்கு வெளிப்புறமாக அதாவது ஆவியின்படி அல்லாமல் எழுத்தின்படி கீழ்ப்படிவதே அதற்கு காரணம்.'' – *Martin Luther, Commentary on Romans, p. 61.*

மற்றவர்களில் குற்றங்காண்பதும், அதைச் சுட்டிக்காட்டுவதும் எளிது. அதே போன்ற, அதைவிட மோசமான குற்றங்களை நாமே செய்துகொண்டிருப்போம். நம்மைவிட மற்றவர்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதால், நாம் எப்படிப்பட்டவர்கள் என்பது புலப்படவே செய்யாது.

பவுல் அதை கொஞ்சமும் அனுமதிக்கவில்லை. அவசரப்பட்டு புறஜாதியாரை நியாயந்தீர்க்க வேண்டாமென்றும், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய யூதர்களே பாவிகள்தாமென்றும் தன் தேசத்தாரை எச்சரிக்கிறார். சில விஷயங்களில் புறஜாதியாரைவிடவும் மோசமானவர்களாக இருந்தார்கள்; ஆனால் புறஜாதியாரைவிட தங்களுக்கு அதிக வெளிச்சம் கிடைத்திருந்ததால், அவசரப்பட்டு மற்றவர்களைக் குறைகூறினார்கள்.

நம்மில் யாருமே நீதிமானில்லை; யாருமே தேவனுடைய தரத்திற்கு ஒத்துப்போகவில்லை; யாருமே பிறப்பிலேயே நல்லவர்களோ, பரிசுத்தவான்களோ இல்லை என்பதைத்தான் பவுல் வலியுறுத்த விரும்புகிறார். யூதரானாலும் புறஜாதியானாலும், ஆணானாலும் பெண்ணானாலும், ஏழையானாலும் பணக்காரனானாலும், தேவனுக்குப் பயந்தவனானாலும் தேவனை மறுதலிக்கிறவனானாலும் நாம் எல்லாருமே குற்றவாளிகள். நற்செய்தி காட்டுகிற தேவ கிருபைமட்டும் இல்லாவிட்டால், நம் யாருக்குமே நம்பிக்கை கிடையாது.

---

நீங்களே சில குற்றங்களைச் செய்துகொண்டு, அதே விஷயத்தில் மற்றவர்களைக் குற்றவாளிகளெனச் சொல்லியிருக்கலாம். இங்கே பவுல் சொல்வதைப் புரிந்துகொண்டு, தேவையான மாற்றத்தை எவ்வாறு செய்யலாம்?

*தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு, பொறுமை, நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ? ரோமர் 2:4.*

***மனந்திரும்புதல் சம்பந்தமான என்ன முக்கியச் செய்தி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது?***

---

---

பாவிகள் மனந்திரும்பும்படி தேவ தயவு ஏவுகிறது; கட்டாயப்படுத்துவதில்லை. அவர் நீடிய பொறுமையுள்ளவர்; அனைவரையும் தம் அன்பால் தம்மிடம் இழுக்க முயல்கிறார். கட்டாயப்படுத்தி, மனந்திரும்பவைப்பது எப்படி மனந்திரும்புதலாக இருக்கமுடியும்? தேவன் கட்டாயப்படுத்தி, மனந்திரும்ப வைத்தால் எல்லாருமே மனந்திருந்திவிடமாட்டார்களா? மனந்திரும்பும்படி சிலரை கட்டாயப்படுத்தி, சிலரை கட்டாயப்படுத்தாமல் இருப்பது சரியில்லையே! பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையில் செயல்படுவதற்கு இணங்கி, சுய சித்தத்தோடு நாம் மனந்திரும்பவேண்டும். ஆம், மனமாற்றம் தேவனுடைய ஒரு ஈவு. ஆனால், அதை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்; நாம் மட்டுமே அந்தத் தீர்மானத்தைச் செய்யமுடியும்.

***தேவனுடைய அன்பை மறுதலித்து, மனந்திரும்ப மறுத்து, கீழ்ப்படியாமையில் நிலைத்திருப்பவர்களுக்கு என்னவாகும்? ரோமர் 2:5-10.***

---

ரோமர் 2:5-10இலும், ரோமர் புத்தகத்தின் மற்ற இடங்களிலும் நற்கிரியைகளின் முக்கியத்துவத்தை பவுல் வலியுறுத்துகிறார். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதால், கிறிஸ்தவ வாழ்க்கையில் நற்கிரியைகளுக்கு இடமே இல்லை என்று நினைத்துவிடக்கூடாது. உதாரணமாக, 'சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து' இரட்சிப்பைத் தேடுகிறவர்களே இதைப் பெறமுடியுமென ரோமர் 2:7 சொல்கிறது. மனிதரின் முயற்சி இரட்சிப்பைப் பெற்றுத்தரமுடியாது என்றாலும், இரட்சிப்பின் முழு அனுபவத்தில் மனிதரின் முயற்சிக்கும் பங்கு இருக்கிறது. வேதாகமத்தை வாசிக்கிற ஒருவரால், நற்கிரியைகளால் பயனில்லை என்று சொல்லவே முடியாது. மெய்யுள்ளத்துடன் உண்மையாகவே மனந்திரும்புகிறவர், தான் விடவேண்டியவற்றை விட்டுவிடவும், அவற்றை மேற்கொள்ளவும் தீர்மானமாக இருப்பார்.

மனந்திரும்பவேண்டும் என்கிற எண்ணம் எப்போதெல்லாம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது? அது மெய்யானதாக இருந்ததா, அல்லது உங்கள் குற்றங்களையும் குறைகளையும் பாவங்களையும் வெறுமனே உதறிவிடுவதற்காக அந்த உணர்வு ஏற்பட்டதா? மனமாற்றம் மெய்யானதாக இல்லாதிருந்திருக்குமானால், நீங்கள் மாறுவதற்கு என்ன செய்யலாம்? ஏன் மாறியே ஆகவேண்டும்?

## மேலும் படிக்க:



"பாவம் என்பது எதிர்பாராமல் மனிதருக்கு நேரிடுகிற ஒரு மோசமான நிகழ்வு அல்ல; மாறாக, மனிதர்கள் யோசித்து, தெரிந்தே செய்வதின் விளைவாகும். பாவம் என்பது நன்மை செய்யாதது அல்ல, மாறாக தேவனுடைய எதிர்பார்ப்பை 'நிறைவேற்றாதது ஆகும்.' சிந்தையாலோ செய்கையாலோ தேவனுக்கு எதிராகக் கலகம்செய்து, அவருடைய பிரமாணத்தை மீறுகிற செயல் ஆகும். தேவன் நியமித்திருக்கும் வரைமுறைகளைத் தாண்டிச் செல்ல பாவம் முயல்கிறது. சுருக்கமாக, பாவம் என்பது தேவனுக்கு எதிரான கலகம்." – *The Handbook of Seventh-day Adventist Theology, p.239*.

"எங்கும் ஒழுக்கக்கேடு நிறைந்திருக்கிறது. காமவிகாரம் இக்காலக்கட்டத்தின் விசேஷித்த பாவம். மக்களுடைய உணர்வுகள் மரத்துப்போயினபோலும்; நல்லொழுக்கத்தையும் நற்குணத்தையும் விரும்புகிறவர்கள்கூட தீமையின் துணிவாலும் வலுவாலும் பெருக்கத்தாலும் கிட்டத்தட்ட சோர்ந்துவிட்டார்கள். அவிசுவாசியும் பரியாசக்காரனும் மட்டுமா அக்கிரமத்தால் நிறைந்துள்ளார்கள்! அப்படியிருந்தால் நல்லதுதான், அப்படியில்லை. தங்களைக் கிறிஸ்தவர்களெனச் சொல்லும் பல ஆண்களும் பெண்களும்கூட தீயவர்களாக இருக்கிறார்கள். அவருடைய வருகைக்காகக் காத்திருப்பதாகச் சொல்லும் சிலர்கூட, அதற்கு ஆயத்தமாக இல்லை. சகல அசுத்தங்களிலிருந்தும் அவர்கள் தங்களைச் சுத்திகரிப்பதில்லை. நீண்டகாலமாக இச்சையிலேயே வாழ்ந்துவிட்டதால், இயல்பாகவே அவர்களுடைய எண்ணங்கள் அசுத்தமானவைகளாக, சிந்தனைகள் கேடுள்ளவையாக இருக்கின்றன.' – *2T, p 346.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *மனித இனம் மேம்பட்டு வருகிறதென சொல்கிற ஒருவருக்கு என்ன பதில் சொல்வீர்கள்? அவர்களுடைய வாதங்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?*

2. *மேலே எலன் ஒய்ட் சொல்வதுபோல உங்கள் வாழ்க்கை இருக்கிறதா? சோர்ந்துபோகாமல், பாவமன்னிப்பு மற்றும் சுத்திகரிப்பு குறித்த தேவ வாக்குறுதிகளை எவ்வாறு பற்றிக்கொள்ளலாம்? 'இனி பயனில்லை. நான் மிகவும் கெட்டுவிட்டேன். நான் இரட்சிக்கப்பட வாய்ப்பில்லை. இனி முயன்று பயனில்லை' என்று உங்களைச் சொல்லவைக்க விரும்புகிறவன் யார்? அதற்குச் செவிகொடுப்பீர்களா அல்லது ' நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே' என்று சொல்கிற இயேசுவுக்குச் செவிகொடுப்பீர்களா? யோவான் 8:11.*

3. *அடிப்படையில் மனிதர்கள் பாவிகள், குறையுள்ளவர்கள் என்று கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கவேண்டியது ஏன் முக்கியமானது? இந்த வருத்தகரமான உண்மையை மறந்தால் என்னவாகும்? நம்முடைய நிஜமான நிலையை தவறாகப் புரிந்துகொள்வது என்னென்ன தவறுகளுக்கு வழிநடத்தலாம்?*

4. *புரொட்டஸ்டன்டுகள் பலர் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்காமல், சாக முடிவுசெய்தார்கள். நம் விசுவாசம் எவ்வளவு உறுதியானது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*